அரசாங்க சேவை ஆணைக்குழு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ சேவை அதியுயர் தர சேவை வகுதியைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு 2023.12.31 ஆம் திகதிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்தப் பரீட்சை மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதுடன், வேறு விதத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டில்லாத சந்தர்ப்பங்களில் "பதவி" எனும் பதம் சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

2. இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி **2024 ஜுலை** மாதம் **05** ஆம் திகதி ஆகும்.

   2.1 எழுத்து மூலப் பரீட்சை: இப் பரீட்சை இரண்டு (02) வினாத் தாள்களைக் கொண்டதாகும். (அட்டவணை 01 ஐப் பார்க்க)

   2.2 பரீட்சைத் திகதி: இந்தப் பரீட்சை 2024 ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெறும். இந்தப் பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உண்டு.

   2.3 பரீட்சையை நடாத்தும் அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகம்

   2.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை:

      (i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் நடாத்தப்படும்.

3. நியமிக்கப்படும் சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை 38 ஆகும். இறுதி வெற்றிடத்திற்கு அல்லது நிலவும் இறுதி வெற்றிடங்களுக்கு, சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களை விட அதிகமாக காணப்படுமிடத்து அந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் என்பதுடன், இந்தப் பதவி உயர்வு செயல்வலுப்பெறும் திகதியாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட திகதி கருதப்படும்.

4. சேவை நிபந்தனைகள்:

   4.1 அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் 2013.12.20 ஆம் திகதியுடையதாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ சேவை அதியுயர் தர சேவை வகுதியைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படவுள்ள

திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு, தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4.2 இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

5. **இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:**

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு அமைய இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூ.41,580-11x755-18 x1030-68425. அதற்கிணங்க, இங்கு 6 ஆவது படிமுறையில் அமர்த்தப்படுவர். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கொடுப்பனவுகளும் இந்த உத்தியோகத்தர்களுக்கும் உரித்தாகும்.

6. ஆட்சேர்க்கப்படும் முறை

6.1 எழுத்துமூலப் பரீட்சை

6.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

7. ஆட்சேர்ப்புத் தகைமைகள்:

(i) அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் தரம் I பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட செயலுாக்கமுள்ள சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல்.

(ii) அதிகாரம்பெற்று உத்தியோகத்தர் தரம் II க்கு ஏற்புடைய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

8. வேறு விடயங்கள்

a. **உடற் தகைமைகள்:**

8.1 அனைத்து அபேட்சகர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இந்தப் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8.2 பதவிக்கு ஆட்சேரப்புச் செய்வதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் 2023.12.31 ஆம் திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

b. வேறு தகைமைகள்

(i) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் அதி உயர் தர சேவை வகுதியின் சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 7.4.3.1 பிரகாரம் எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் அனைத்து விண்ணப்பதாரிகளும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(ii) எழுத்துமூலப் பரீட்சையில் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறைக்கு அமைய நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய பதவி வெற்றிடங்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(iii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையை நடாத்தும் சந்தர்ப்பத்திலேயே தகைமை பரீட்சிப்பும் இடம்பெறும்.

(iv) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமையைப் பூர்த்திசெய்ததாக கருதப்படமாட்டாது.

9. வேறு நிபந்தனைகள்

9.1 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கட்டாயம் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் தனது கடமைளை நிறைவேற்றக் கட்டுப்பட்டுள்ளனர்.

9.2 ஏற்புடைய பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிப்படும் தேவையான தேர்ச்சிகள் மற்றும் திறன்களை அனைத்து உத்தியோகத்தர்களும் உரிய முறையில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

9.3 அனைத்து நியமனங்கள் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இல 2310/29 மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

9.4 தேவையான சந்தர்ப்பங்களில் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூபா இரண்டாயிரம் (ரூ. 2000/-) ஆகும். இந்தப் பரீட்சைக் கட்டணத்தை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலங்கை வங்கி பத்தரமுல்லை கிளையின் கணக்கிலக்கம் 7039793 க்கு இலங்கையிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிட்டுப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூண்டில் ஒட்டுதல் வேண்டும். (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்). எக் காரணம் கொண்டும் இப் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது பிறிதொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது.

11. **விண்ணப்பிக்கும் முறை:**

a. விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் தயாரித்தல் வேண்டும்.

b. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக, **8½"x12"** அளவிலான கடதாசியின் **(A4)** இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பப் படிவங்களை தமது கையெழுத்தில் அல்லது கணினியில்/ தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்து தயாரித்துக் கொள்ள முடியும். இல. **01** தொடக்கம் **10** வரை முதலாம் பக்கத்திலும், இல. **11** தொடக்கம் **13** வரை இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தமது விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் பூரணமற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உள்ளதா? என்பதை பரீட்சித்துப் பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். (விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்).

c. அதற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, தமது பிரிவுத் தலைவர் ஊடாக **2024.07.05** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், "சுஹுருபாயா", பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இன்றேல் நிர்வாகப் பிரிவில் விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் " சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிக்கு

ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறமை போட்டிப் பரீட்சை - 2023" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

d. விண்ணப்பப் படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பகிரங்க நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணை பெற்ற உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரச சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

e. தபாலில் காணாமல் போகும் அல்லது பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

f. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில், எல்லா விதத்திலும் பரிபூரணமான விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் 011 2101553 எனும் தொலைப்பேசி இலக்கத்திற்கு அழைத்து அது தொடர்பில் கட்டுப்பாட்டாளர் (நிர்வாகம்) அவர்களிடம் அறிவித்தலில் வேண்டும். இவ்வாறு அறிவிக்கும் போது, விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இல ஆகிய விபரங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன், தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி ஏற்கனவே தம் வசம் வைத்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற் பிரதி, விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டு ஆகிய ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பிடத்தைக் கொண்டவராக இருப்பின், தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு வசதியாக, மேற்சொன்ன விபரங்களுடன் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, தமது கோரிக்கைக் கடிதத்தை தொலைநகல் (0115980257) இலக்கத்தினூடாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்திற்கு அனுப்புவதன் மூலம் விசாரிப்பது சாலச் சிறந்ததாக அமையும்.

12. **பரீட்சைக்குத் தோற்றுதல்:**

a. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும். பரீட்சைத் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

b. பரீட்சார்த்திகள், தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை, குறித்த பரீட்சை மண்டபத்தின் பரீட்சை மேற்பார்வையாளரிடம் முதலாவது நாளிலேயே கையளித்தல் வேண்டும்.

c. குறிப்பு: பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை விநியோகிப்பதானது, அப் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கும், பதவியொன்றை வகிப்பதற்கும் அல்லது இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதாக கருதப்பட மாட்டாது.

13. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்:**

பரீட்சார்த்தியானவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்து பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

(iii) செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தை நிரூபிக்கக் கூடியவாறு, தமது முகத்தையும், காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். இவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் பரீட்சார்த்திகளை பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த வேளை தொடக்கம் பரீட்சை முடிந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு பரீட்சார்த்திகளை எளிதில் அடையாளம் காணக் கூடியவாறு, பரீட்சார்த்திகள் தமது முகத்தையும், காதுகளையும் மூடாது இருத்தல் வேண்டும்.

14. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனைகள்.**

விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக கவனம் செலுத்தி மிகச் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கு அமைய எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத் தெரிய வரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும்.

15. **பரீட்சையை நடாத்துதல்:**

a. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.
b. பரீட்சார்த்தி ஆகக் கூடிய கல்வித் தகைமையைப் பெற்றுக் கொண்ட மொழியில் அல்லது ஏதேனுமொரு அரசகரும மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.
c. தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

16. **பரீட்சைப் பெறுபேறுகள்**

a. <u>பரீட்சார்த்திகள் எழுத்துமூலப் பரீட்சையில் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீடசையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளை உள்ளடக்கி திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேற்று அட்டவணை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அரசாங்க சேவை</u>

<u>ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும். அதன் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய ஏற்புடைய பெறுபேற்று அட்டவணை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பின்னர் அது அந்தத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்</u>.

b. எழுத்து மூலப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுகின்றனர். அச் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாவதற்கு பரீட்சார்த்திக்கு நேரிடும்.

17. இங்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய
குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

2024 ஜூன் மாதம் 10 ஆம் திகதி.
"சுஹுறுபாயா"
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
பத்தரமுல்லை.

அட்டவணை 1

எழுத்துமூலப் பரீட்சையில் பாடத்திட்டம் மற்றும் புள்ளிகள் வழங்கும் திட்டம்

- எழுத்துமூலப் பரீட்சைக்கு வழங்கப்படும் அதிகபட்ச புள்ளிகள் 40 ஆகும்.

| வினாப் பத்திரம் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்துவதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 ஆவது வினாப்பத்திரம் | இந்த வினாப்பத்திரம் 04 பகுதிகளைக் கொண்டது. ஒரு பகுதிக்கு 25 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.<br>(i) சிரேஷ்ட அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்களின் கடமைகளுடன் தொடர்புடைய சம்பவக் கற்கை பற்றிய வினாக்கள்<br>(ii) சர்வதேச விமான சேவைகள் அமைப்பின் ஒழுங்கு விதிகள், சர்வதேச விமான சேவையுடன் தொடர்புடைய இரு தரப்பு மற்றும் பல்தரப்பு ஒப்பந்தங்கள் பற்றிய வினாக்கள்<br>(iii) அலுவலக முறைமைகள் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் பற்றிய வினாக்கள்<br>(iv) ஆங்கில மொழித் திறனைப் பரீட்சிப்பதற்கான வினாக்கள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| II ஆவது வினாப்பத்திரம் | குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் சட்டம், குடியுரிமைச் சட்டம் மற்றும் ஆட்களைப் பதிவுசெய்யும் சட்டம் (அந்தச் சட்டங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் அவற்றுக்கு ஏற்புடையதாக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் உள்ளடங்களாக) என்பவற்றை தழுவிய வினாக்களைக்கொண்டிருக்கும் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**அட்டவணை 2**

## கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கும் திட்டம்

- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு வழங்கப்படும் அதிகபட்ச புள்ளிகள் 60 ஆகும். மேலதிக சேவை அனுபவத்திற்கு 2019.06.13 ஆம் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல 01/2019 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | அதிகபட்ச புள்ளிகள் | தெரிவுசெய்யப்படுவதற்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| சேவைமூப்பு கூடிய சிரேஷ்ட உத்தியோகத்தருக்கு அதிகபட்ச புள்ளிகள் வழங்கப்படும்<br>ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சேவைமூப்பு = (சேவைமூப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளிகள் / சேவைமூப்பு கூடிய உத்தியோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடங்கள் X12-மாதங்கள்)) x ஏற்புடைய உத்தியோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடங்கள் X12-மாதங்கள்) | 60 | ஏற்புடையதன்று |
| மொத்தப் புள்ளிகள் | 60 | |